# பஷீர் மீரான் படைப்புகளில் - தாக்க ஆய்வு

பொ.கோகிலா

**முன்னுரை**

மேலை நாட்டார் வகுத்தளித்த ஒப்பிலக்கியக் கொள்கைகளில் பெரும் பங்கினை வகிக்கும் தாக்க ஆய்வு ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரு நூல்களில், ஒரு நூலின் தாக்கம் அதாவது ஒரு மொழி நூலாசிரியனின் கருத்தோ, நடையோ வேற்றுமொழியாசிரியனின் படைப்பில் காணப்படுவது. கொள்வினை, கொடுப்பினை முறைகளைக் ஆராய்வதாகும். தமிழ் மலையாள சிறுகதைகளில் இரண்டு மொழியாசிரியர்களிடத்து காணலாகும் தாக்கச்சூழலை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

**தாக்க ஆய்வு**

தாக்க ஆய்வு ஒப்பிலக்கியத்தின் முக்கியப்பகுதி என்று கூறியவர் சைமன்ஜீன். கொள்வினை, கொடுப்பினை என்னும் உறவு நிலைகளை ஆராய்வது தாக்க ஆய்வாகும். இ∴து இலக்கியக்கடன் பற்றிய ஆய்வாக உலக நாடுகள் அனைத்திலும் நடைபெறுகின்றது. தாக்கம் என்பது காப்பி அடித்தல் அல்ல, நகல் எடுப்பது அல்ல, இலக்கிய அழகியல் அமைப்பினை உள்வாங்கி இன்னொரு படைப்பாளி தன்னுடைய இலக்கியத்தில் கொண்டு வருவதாகும். இத்தாக்கத்தினால் புதிய கருத்து நிலை, புதிய அழகியல் கூறுகள் செழுமை பெறுகின்றன.

“தாக்கத்தைக் கொடுப்போனுக்கும், தாக்கத்தைப் பெறுவோனுக்கும் இடையிலுள்ள நேரடியான காரண ரீதியான உறவினை அடிப்படையாகக் கொண்டதே தாக்கக் கொள்கை என்பது வெளிப்படை. நேரடி உறவினைக் கோடிட்டுக் காட்டாமலேயே இரண்டு நூல்களுக்குள்ள தொடர்பையும் இக்கொள்கை குறிக்கும்” என்கிறார் வை.சச்சிதானந்தன்.

“எல்லா இலக்கியங்களும் மற்ற இலக்கிய நூல்களின் நிழல்களைத் தாங்கியுள்ளன” என்கிறார் கா.செல்லப்பன். (ப,10) இலக்கியங்களிடையே நிகழும் தாக்கம் தான் ஒரு மொழியின் இலக்கிய உருவாக்கத்துக்கும், அதன் பின் ஏற்படும் இலக்கிய வளர்ச்சிக்கும் பக்கபலமாகத் திகழ்கிறது. “ஒரு அறிவுச் சூன்யமான நிலையில் எந்த ஆசிரியனோ அவனுடைய நூலோ தோன்றவோ அன்றி வளரவோ முடியாது. தனது மொழியிலிருந்தோ அல்லது அயல்மொழியிலிருந்தோ சிற்சில கருத்துக்களின் ஆதாரம் வந்திருந்தாலும், அறிந்தோ அறியாமலோ ஒரு ஆசிரியனால் இரவல் வாங்கப்பட்ட அக்கருத்துக்களால் தூண்டப்பட்டுத்தான் இலக்கிய வளர்ச்சி ஏற்படுகிறது” என்று தாக்கத்தின் தோற்றச் சூழலினை வரையறுக்கிறார்.

**வைக்கம் முகம்மது பஷீர் - தோப்பில் முகம்மது மீரான் வாழ்க்கைச் சூழல்**

தாக்கத்திற்குட்பட்ட எழுத்தாளர்களின் வாழ்க்கை அனுபவங்களும், காலச் சூழலும் படைப்பாக்கத்தில் இன்றியமையாதப் பங்கு வகிக்கின்றன. ஒரே மாதிரியான காரணங்கள், ஒரே மாதிரியான பயனையே அளிக்கும் என்றற எடுகோள்கள் இதற்கு ஆதாரம். வைக்கம் முகம்மது பஷீர் 1908 ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 – ம் நாள் திருவிதாங்கூரில் பிறந்தவர். கேரள நாட்டிற்காகவும், சுதந்திர இந்தியாவிற்காகவும் பல போராட்டங்களில் பங்கு

கொண்டவர். மனித நேயத்தினை வலியுறுத்தியவர். இஸ்லாமியச் சமூக மக்களின் வாழ்வின் இன்ப துன்பங்களை வெளிப்படையாய் எழுதியவர். சிறுவயதில் குடும்பச் சூழலில் வறுமையில் வாடிய தன் சொந்த அனுபவங்களைப் படைப்புகளில் வெளிப்படுத்திச் சென்றவர்.

தோப்பில் முகம்மது மீரான் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1944 – ம் ஆண்டு செப்டம்பர் 26 –ம் நாள் பிறந்தவர். இளம் வயதிலேயே தனது இஸ்லாம் சமூகத்தில் நிகழ்ந்த கொடூரங்களைக் கண்டும், அனுபவித்தவைகளையும் வெளிக்காட்ட வேண்டி தன் சொந்த அனுபவங்களைக் கதைகளாக எழுதியவர். சில இடங்களில் தானே கதாப்பாத்திரமாகவும் திகழும்படியாகவும் கதைகளைப் புனைந்தவர். சமுதாயத்தைச் சீர்திருத்தும் நோக்கில் கதையமைத்தவராவார்.

**தாக்கச் சூழல்**

மலையாள இலக்கிய உலகின் தனிப்பெரும் அடையாளமான வைக்கம் முகம்மது பஷீர், மலையாள இலக்கியப் படைப்பாளுமைகளுள் தனக்கென ஒரு நடையைக் கையாண்டவர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கைதேர்ந்த உத்தி முறையைக் கையாண்டெழுதியவர். வுளர்ந்த வளரப்போகும் இளைய தலைமுறையினர் இவரது படைப்பினைப் படித்தறிந்தால் சிறந்த இலக்கியப் படைப்புகளை உருவாக்கிட முடியும் என்னும் நிலையில் எழுத்தாளுமையைப் பெற்றுத் திகழ்ந்தவர். "பஷீரின் படைப்புகளை முழுமையாகப் படித்து அதன்மேல் ஈடுபாடு கொண்டு பஷீரின் வாழ்க்கைக் குறிப்பினை மொழிபெயர்த்து முழுவதுமாகப் புரிந்து கொண்ட தோப்பில் முகம்மது மீரான் அவரைப் போலவே தானும் தன் சொந்த சமுதாயத்தைப் பற்றி எழுத வேண்டிய நோக்கில் கதைகளை எழுதத் துவங்கியதாகக் கூறுகிறார்"

பஷீரை முன்மாதிரியாகக் கொண்டு எழுத ஆரம்பித்தமையால் மீரானின் படைப்புகளில் பஷீரின் தாக்கம் வெளிப்படுவதனைக் காணலாம். "வைக்கம் முகம்மது பஷீர் தகழி, கேவதேவ் போன்ற மலையாள எழுத்தாளுமைகளைப் படித்தறிந்ததினால் அவர்களைப் போல நாமும் எழுதினால் என்ன? என்ற எண்ணம் பத்தாம் வகுப்பு படிக்கும் போதே உருவானது. அந்த எண்ணத்தில் பஷீரின் எழுத்துக்களைப் படித்து இன்புற்றேன். "இதுபோல நாமும் நமது சொந்த சமுதாயத்தைப் பற்றி எழுத வேண்டுமென ஆசை பஷீரிடமிருந்தே எனக்கு உருவானது" என்று மீரான் குறிப்பிடுகிறார். (ஆய்வேடு, நேர்காணல் பக,327)

**பஷீர் - மீரான் படைப்புகளில் கல்வியறிவு**

மலையாள இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த மாற்றம் நிகழ ஆங்கில இலக்கியத்தோடு அதற்கு உண்டான தொடர்பு ஒரு காரணமாய் அமைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் ஆதிக்கம் கேரளத்தில் பரவத் தொடங்கிய போது, அவற்றோடு ஆங்கில மொழியின் மீதுள்ள மோகமும் மக்களிடையே ஊடுருவியது. 1835 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் இந்திய நாட்டின் கல்வி முறையைப் பற்றி ஆங்கிலேயர் ஒரு முடிவுக்கு வந்தனர். அதற்குப் பிறகு ஆங்கில மொழியும் இலக்கியமும் மலையாளிகளுக்கு இன்றியமையாதவையாகிவிட்டன மலையாள இலக்கியத்தின நவீன காலம் இந்தக் கட்டத்திலிருந்து தான் தொடங்குகிறது.

சமுதாயத்தில் நடைமுறையில் நிலவி வந்த சிக்கல்கள் பலவும் செய்தித்தாள்கள், இதழ்கள், வாயிலாக மக்களைச் சென்றடைந்தன. இவை சுமந்து வரும் சமுதாய நிகழ்வுகள், செய்திகளை அறிந்துகொள்ள மக்கள்

பெரிதும் ஆர்வம் காட்டினர். இதனால் மக்களிடையே கல்வியறிவின் தேவை உருவானது. கேரளாவில் 19 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைப் பத்திரிக்கையாசிரியர்கள் காலம் எனலாம். இந்தக் காலக்கட்டத்தில் பத்திரிக்கையாசிரியர்கள் மலையாள மக்களிடையே மொழியறிவையும் இலக்கிய வாசிப்புத் திறனையும் வளர்த்தனர்.

இத்தகைய சூழல்களால் விடுதலைக்கு முன்பும், பின்புமான காலப்பகுதிகளில் மலையாள மக்களிடையே கல்வியறிவு நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. முற்ற மாநிலங்களை விடக் கேரளத்தில் கல்வியறிவின் வளர்ச்சி நிலை குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருந்தது. இன்றைய கேரள மக்கள் முழுமையான கல்வியறிவைப் பெற்றுள்ள நாடுகள், நகரங்களுக்குள் முதன்மையானதோர் இடத்தினையும் பெற்றுள்ளனர். வைக்கம் முகம்மது பஷீர் நாவல்கள், சிறுகதைகள் இஸ்லாமியச் சமுதாய மக்களிடத்தில் நிலவும் கல்வியறிவின்மை பற்றிய சூழல்களை எடுத்துக்காட்டி கல்வியறிவின் இன்றியமையாமையை வெளிப்படுத்தும் வகையில் கதைகளைப் படைத்திருக்கிறார்.

பஷீரின் **'ஐஷீக்குட்டி'** என்னும் கதையில் ஐஷீக்குட்டி தனது சுய கவுரவத்தினாலும் பிடிவாத குணத்தினாலும் பிரசவ வலி எடுத்தும் இயல்பாகப் பிறக்க இருக்கும் குழந்தையை பிரசவிக்காமல் கடன் வாங்கியாவது டாக்டரை வரச் சொல்லி பிரசவிக்க வேண்டும் என்று வீண் பிடிவாதம் செய்வதனை

"மாட்டேன் ஐஷீக்குட்டி வெறித்துப் பார்த்தவாறே விம்மினாள் நான் செத்துப்போறேன்." ஐஷீக்குட்டி கண்ணூ நீ இப்படிச் சொல்லாதேம்மா அவன் கையில் காசில்லே எந்தங்கமில்ல நீ பெத்துடும்மா, ஐயோ, அத்தே படைச்சவனை நினச்சு லாக்கட்டரைக் கூட்டியாங்களேன்!" (ப.80)

என்னும் வரிகளில் குறிப்பிடுகிறார். இக்கதையின் மூலம் தனது கணவனிடம் பணமில்லை என்ற போதும் அதனைப் புரிந்து கொள்ளாமல் கணவனின் தம்பி மனைவி அஸ்யாமாவிற்கு மருத்துவரை வரவழைத்து பிரசவம் பார்த்த காரணத்தினால் தனக்கும் கடன் வாங்கியாவது மருத்துவரை வரச்சொல்லி பிரசவிக்க வேண்டும் என்று போலி கவுரவத்தினால் நிதர்சனத்தினைப் புரிந்து கொள்ளாமல், தனது உயிரையும், தன் குழந்தையின் உயிரையும் பெரிதாக எண்ணாமல் துச்சமாக நினைத்து மரணவலியை அனுபவிக்கும் ஐஷீக்குட்டியின் வாயிலாக கல்வியறிவின் தேவையைப் புலப்படுத்தியுள்ளார். தான் பிரசவிக்கையிலும் டாக்டர் வரவேண்டுமென்று சொல்லி அழுது டாக்டரை வரவழைத்தது படிப்பறிவற்ற ஒரு பெண்ணின் தற்பெருமையாகும் என்று கல்வியின் இன்றியமையாமையக் குறிப்பிடுகிறார்.

பஷீரைப்போலவே மீரானின் நாவல்கள், கதைகளிலும் கல்வியறிவைக் குறித்த விழிப்புணர்வுக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. விடுதலைக்குப் பிந்தைய காலக்கட்டத்திலும் இஸ்லாமிய மக்களிடையே கல்வியறிவைக் குறித்த மூடநம்பிக்கைகள் பரவலாக நிலவி வர, அவர்களிடம் கல்வி குறித்த மறுமலர்ச்சியைக் கொண்டு வரவே அவரது புனைகதைகளில் கல்வியறிவைக் குறித்த செய்திகள் பெரும்பான்மையாக இடம்பெற்றுள்ளன.

**'நிற்காத கால்'** என்னும் கதையில் கல்வி என்பது பணக்காரர்களின் பிள்ளைகளுக்கு மட்டும் உரியது என்பதையும், படிக்கும் ஆசை இருந்தாலும் ஏழையாகப் பிறந்த காரணத்தினால் கல்வி மறுக்கப்பட்ட அவல நிலையினையும், வரிகட்டாத, கணக்குக் கட்டாத, அரசு அதிகாரியாக இல்லாத ஏழைகளின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி எட்டாக்கனியாக மாறிய நிலையையும், கல்வியின் பால் சமூகத்தாரிடையே ஏற்படும் முரண்பாடுகளையும் வெளிக்கொணரும் வகையில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இக்கதையைப் படைத்துள்ளார்.

**'குட்டன் பிள்ளை சார்'** என்னும் கதையில் கல்வி என்பது காலத்தால் அழியாதது கல்வியின் மூலம் கிடைக்கும் ஒழுகலாறு என்பது வாழ்க்கையின் நதிப்பயணத்தை போன்றது என்று கல்வியின் முக்கியத்துவத்தினை வெளிக்கொணரும் வகையிலும், கல்வி நிலையங்களில் ஆசிரியர் மாணாக்கரின் உறவு நிலைகள் அமைய வேண்டிய முறைகளையும் சூழல்களையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைத்துள்ளார்.

பஷீரும், மீரானும் தங்களது சமுதாயத்தில் நிலவி வரும் மூடபழக்க வழக்கங்களுக்கும், சிக்கல்களுக்கும் கல்வியறிவே இன்றியமையாதது என்னும் கருத்தினை மையப்படுத்தி தங்களது கதைகளைப் புனைந்துள்ளனர். குல்வி குறித்த சிந்தனைகளை தங்களது சூழலில் தம் சமூகத்தினரிடையே முன்வைத்தபொழுது பெரும் பிரச்சினைகளையும் அவமானங்களையும் சந்தித்துள்ளனர். இருப்பினும் அவர்கள் தங்கள் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடவே செய்தனர். துங்கள் சமுகக் குற்றங்குறைகளை நாம் களையாவிட்டால் வேறு எவராலும் இயலாது என்னும் உயரிய சிந்தனை கொண்டவர்காளக தொடர்ந்து இயங்கியுள்ளதிலிருந்து பஷீரும், மீரானும் ஒத்தகருத்துடையவர்களாக உள்ளனதனைக் காணமுடிகிறது. பஷீர் கதையில் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்த்துகிறார். மீரான் கதைகளில் கல்வியின் முக்கியத்துவத்தைக் கூறி மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கதையை அமைக்கிறார்.

**முடிவுரை**

வைக்கம் முகம்மது பஷீர், தோப்பில் முகம்மது மீரான் படைப்புகளில் இஸ்லாமிய சமூகத்தினரிடையே நிலவி வந்த மூடபழக்க வழக்கங்களை ஒழித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கல்வியறிவுச் சிந்தனைகளை இருவரும் ஒருமித்த சிந்தனையில் வெளிப்படுத்தியுள்ள விதத்தின் வழியாக அவர்களது தாக்கச்சூழலினையும், அதிலிருந்து மாறுபட்டு தன் கருத்தைப் புலப்படுத்தும் தன்மையையும் இக்கட்டுரையின் வாயிலாகத் தெரியமுடிகிறது.

**துணைநூல்கள்**

[1] முனைவர் ம.திருமலை, ஒப்பிலக்கியக் கொள்கைகளும் பயில்முறைகளும்
[2] டாக்டர் ச.சீனிவாசன்,ஒப்பிலக்கிய நோக்கில் தமிழ் மலையாள நாவல்கள்
[3] டாக்டர் கா.செல்லப்பன், ஒப்பிலக்கியம் கொள்கைகளும் செயல்முறைகளும்
[4] முனைவர்.கி.ராசா,ஒப்பிலக்கியம்
[5] இர.பிரபா,ஆய்வேடு (தோப்பில் முகம்மது மீரான் - வைக்கம் முகம்மது பஷீர் நாவல்கள் ஒப்பாய்வு)
[6] வை.சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம் அறிமுகம்